# கூடலூர் (கோ) நகராட்சி

2024-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் (31.12.2024) -ஆம் தேதி செவ்வாய்க்கிழமை காலை 11.30 மணிக்கு நகர்மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற நகர்மன்ற சாதாரணக்கூட்ட பொருளின் தீர்மான விவரம்.

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | நகர்மன்ற பெருள் வரிசை எண் மற்றும் பொருள் விவரம் | தீர்மானம் எண் / தீர்மான விவரம் |
| --- | --- | --- |
| 31.12.2024 | **<u>பொருள்: 01</u>**<br>கூடலூர்(கோ) நகராட்சிக்கு 5.20MLD கொள்ளளவு கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் கட்ட Tamilnadu Water Investment Company Ltd., Chennai என்ற நிறுவனத்தின் மூலம் சர்வே செய்து, வரைபடங்கள் மற்றும் விரிவான திட்ட அறிக்கை (DPR) தயாரிக்க கூடலூர் நகரமன்ற தீர்மான எண்.648 நாள்.13.08.2024ன் படி மன்ற அனுமதி பெறப்பட்டு, மேற்படி நிறுவனத்திற்கு 30.08.2024ஆம் தேதியில் பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. ஆனால், இந்நிறுவனமானது நாளது வரை பணி துவங்காமலும் எவ்வித முன்னேற்றமும் இல்லாமலும் இருந்து வருகிறது. இதனால், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு விரிவான திட்ட அறிக்கை (DPR) சமர்ப்பிக்க இயலாத சூழ்நிலை ஏற்படுகிறது.<br>எனவே, Tamilnadu Water Investment Company Ltd. Chennai என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி உத்தரவினை இரத்து செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>மேலும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னைமற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் ஆகியோரின் அறிவுரையின்படி, இத்திட்டத்தை செயல்படுத்த நகராட்சி | தீர்மானம் எண்.710.<br>அங்கீகரிக்கப்படுகிறது |

<table>
<tr><td></td><td>நிர்வாக இயக்குநரகத்தில் பல நகராட்சிகளில் திட்டப் பிரேரணைகள் மற்றும் விரிவான திட்ட அறிக்கைகள் தயார் செய்த தனியார் கலந்தாலோசகர் மூலம் பணியை விரைந்து முடிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. இணை ஆணையர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களின் 13.12.2024ஆம் தேதிய காணொளி ஆய்வுக் கூட்டத்திலும் இத்திட்டப்பணியை விரைந்து முடிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே, இப்பணியை அனுபவமுள்ள வேறு கலந்தாலோசகர் மூலம் மேற்கொள்ளவும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு :<br>1. Tamilnadu Water Investment Company Ltd., Chennai என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி உத்தரவினை இரத்து செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. இப்பணிக்கு அனுபவமுள்ள கலந்தாலோசகரை தேர்வு செய்ய ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>(ந.க.எண். 1806/2023/இ1)</td><td></td></tr>
<tr><td></td><td><u>பொருள் எண்:02</u><br>கடலூர்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை கிடங்கு மற்றும் நகராட்சி அலுவலகத்தில் உள்ள பழைய பழுதடைந்த டேங்கர்கள்(இரும்பு), HDPE டேங்க், இரும்பு பீரோ, குப்பைத் தொட்டிகள், இரும்பு மேசை, பழைய நாற்காலிகள், குழல் விளக்குகள், மரமேசை, GI குழாய்கள் மற்றும் UPVC குழாய்கள் ஆகியவற்றை ஏலத்தில் விட உத்தேச மதிப்பீடு ரூ.86,278/-க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பொருட்களை ஏலம் விட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>(ந.க.எண் 3250 /2024/இ1)</td><td>தீர்மானம் எண்.711,<br>அங்கீகரிக்கப்படுகிறது</td></tr>
</table>

**பொருள் எண்:03**

கடலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளிலுள்ள சமுதாயக் கழிப்பிடங்கள் பொதுமக்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் கழிப்பிடங்களை ஆய்வு செய்ததில் கீழ்க்காணும் இடங்களில் உள்ள சமுதாயக்கழிப்பிடங்களில் மின்விளக்குகள், மின் இணைப்பு, தண்ணீர்க்குழாய்கள், தொட்டி, தரைத்தளம், பூச்சு, கதவு, ஜன்னல், பேசின் மற்றும் கை கழுவும் பேசின் ஆகியன பழுதடைந்துள்ளதால், அதனை சரி செய்யவும், மிகவும் பழுதடைந்த பொருட்களை மாற்றி புதியதாக அமைக்கவும் வேண்டியுள்ளது. மேலும் சில கழிப்பிடங்களில் நாப்கின் இயந்திரம் இல்லாமல் உள்ளது.

1. செல்வபுரம்
2. திருமலை நாயக்கன்பாளையம்
3. சாரங்க நகர்
4. அம்பேத்கார் நகர்
5. காமராஜ் நகர்
6. ஸ்ரீ பாரதி நகர்
7. அம்மன் நகர்
8. கீழத்தெரு
9. எம்.ஜி.ஆர் நகர்
10. புதுப்புதூர்
11. பழையபுதூர்
12. அரிஜன காலனி
13. தேவையம்பாளையம்
14. தெக்குப்பாளையம்

எனவே, மேற்காணும் கழிப்பிடங்களில் பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ரூ.5.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே, பொதுமக்களின் அவசியம்

தீர்மானம் எண்.712.
அங்கீகரிக்கப்படுகிறது

| | | |
|---|---|---|
| | கருதி இப்பணிகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால் நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 3251/2024/இ1) | |
| | **<u>பொருள் எண்:04</u>**<br>கூடலூர் நகராட்சியில் மாதம் ஒருமுறை மின்தடை ஏற்படுவதாலும் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத்தால் அவ்வப்போது மின் பணிகள் நடைபெறுவதாலும், நகராட்சி அலுவலகத்தில் மின்சாதனப் பொருட்களை இயக்க இயலாத சூழல் ஏற்படுகிறது. நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம், திருப்பூர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயம்புத்தூர் மற்றும் இதர அலுவலகங்களிலிருந்து மின்னஞ்சல் வாயிலாக வரப்பெறும் தபால்கள், இணையதளம் வாயிலாகவும் பொதுமக்களிடமிருந்தும் வரப்பெறும் மனுக்கள் மற்றும் கோரிக்கைகளின் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு பதிலளிக்க வேண்டியுள்ளது. மேலும், சொத்துவரி, குடிநீர்க்கட்டணம், தொழில்வரி மற்றும் தொழில் உரிமக் கட்டணம் ஆகிய கட்டணங்கள் கணினி வாயிலாக வசூல் செய்யப்பட்டு வருகிறது. எனவே, மின்சாரம் தடைபடும் நேரங்களில் அலுவலகப் பயன்பாட்டிலுள்ள கணினிகளை இயக்குவதற்கு மின்சாரம் தேவைப்படுகிறது. இச்சமயங்களில் வாடகை மூலம் ஜெனரேட்டர் இயக்கி பணிகள் மேற்கொள்ள அவசியமாகிறது. எனவே, வாடகை மூலம் ஜெனரேட்டர் இயக்கி பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.15,000/-ஐ நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 534/2024/இ1 | தீர்மானம் எண்.713.<br>அங்கீகரிக்கப்படுகிறது |
| | | |

| | | |
|---|---|---|
| | **பொருள் எண்:05**<br>இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் டெங்கு கொசுப் புழு மற்றும் இதர நோய் பரப்ப கூடிய கொசுப் புழுக்களை கண்டறிந்து தடுப்புப் பணிகளை மேற்கொள்ள 52 DBC பணியாளர்களை கொண்டு பணிகளை மேற்கொள்ள திரு.செபஸ்திராஜ் மாணிக்கம் ஒப்பந்ததாரர் அவர்களுக்கு கடந்த அக்டோபர்-2024 முதல் டிசம்பர்-2024 வரை பணி நீடிப்பு உத்திரவு வழங்கி பணிகள் மேற்கொண்டு வந்த நிலையில் அவரது ஒப்பந்த பணிக்காலம் முடிவடைய இருப்பதால் மேலும் மூன்று மாத காலம் (77 பணி நாட்கள்) ஜனவரி-2025 முதல் மார்ச்-2025 வரை கால நீட்டிப்பு வழங்கிடவும். மேலும் ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.32.75 லட்சத்திற்க்கும் பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** : அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். 1622 /2023/எச்1 | தீர்மானம் எண்.714,<br>அங்கீகரிக்கப்படுகிறது |

ஒம்/-அ.அறிவரசு
நகர்மன்ற தலைவர்.
கூடலூர்(கோ)நகராட்சி.

/ உண்மை நகல் /

3/1/25
ஆணையர்.
கூடலூர்(கோ)நகராட்சி.

3.1.2025